**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்**
**முன்னிலை: திருமதி.S.சப்னா, B.B.M.L.L.M.,**
**நீதித்துறை நடுவர், பல்லடம்.**
**2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 26 ம் நாள் வியாழக்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீவிசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 12 ஆம் நாள்**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண்.64/2016**
**CNR.No.TNTI11- 000082 -2016**

அரசுக்காக:
காவல் ஆய்வாளர்,
பல்லடம், காவல்நிலையம்
(குற்ற எண்.1111/2015) – குற்றமுறையீட்டாளர்

//எதிர்//

1) கார்த்திக் (வயது 25),
த/பெ. மருதையன்,
பர்மாகாலனி,
திருவெறும்பூர், திருச்சி.
**தற்போதைய முகவரி**
க.எண்.1/385 விநாயகர் கோவில் வீதி,
அறிவொளி நகர், பல்லடம்.

2) நாகேந்திரன் (வயது 24),
த/பெ. மோகன்குமார்,
ஈஸ்வரன் கோவில் பின்புறம்,
திருப்பூர்.
**தற்போதைய முகவரி**
க.எண்.1/929 மாரியம்மன் கோவில் வீதி,
அறிவொளி நகர்,
பல்லடம்.

**குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், பல்லடம்**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண்.64/2016**

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021 தேதியிட்ட ROC. No. 814/2020 F1 (P.Dis.No.36/2021) படியும் விதி 106 Criminal Rules of Practice –2019 ன்படியும் வழக்கின் தொகுப்பு கீழ்க்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.

| S.No. | Case summary | | | |
|---|---|---|---|---|
| (I) | The Period of remand of the accused | Name of the accused | Date of Remand | Release on |
| | | 1) Karthick<br>2) Nagendhiran | 21.11.2015<br>21.11.2015 | 07.05.2016<br>04.05.2016 |
| (ii) | Date of filling of the complaint/ final report in the | Filling of Complaint | Filing of Final report | |

| | | | | |
|---|---|---|---|---|
| | court | Complaint Statement on 17.09.2015 | பல்லடம் குற்றவியல் நீதித் துறை நடுவர் நீதிமன்றத்தில் 01.03.2016 தேதியன்று தாக்கல் செய்யப்பட்டது. | |
| (iii) | Date of Committal of the case to the court of Sessions | Not applicable | | |
| (iv) | Date of Questioning of the accused under section 457,380,511 of IPC as the case may be | 31.03.2016 | | |
| (v) | Filing of all Miscellaneous petitions and their results | Crl.M.P.No. | Date of filing | Result |
| | | Cmp.No.603/2016 | 05.02.2016 | Allowed |
| | | Cmp.No.604/2016 | 05.02.2016 | Allowed |
| | | Cmp.No.3388/2016 | 22.06.2016 | Allowed |
| | | Cmp.No.2140/2017 | 12.04.2017 | Allowed |
| | | Cmp.No.2141/2017 | 12.04.2017 | Allowed |
| | | Cmp.No.2142/2017 | 12.04.2017 | Allowed |
| | | Cmp.No.3006/2017 | 14.06.2017 | Allowed |
| | | Cmp.No.3007/2017 | 14.06.2017 | Allowed |
| | | Cmp.No.4133/2018 | 29.08.2018 | Allowed |
| | | Cmp.No.4134/2018 | 29.08.2018 | Allowed |
| | | E-Crmp.No.364/2022 | 15.12.2022 | Allowed |
| | | Cmp.No.5508/2022 | 22.12.2022 | Allowed |
| | | Cmp.No.415/2024 | 03.09.2024 | Allowed |
| (vi) | Date of Examination in chief and cross | Name of the Examination | Date of Chief | Date of Cross |
| | | PW1- Ravikumar | 16.03.2021 | - |
| | | PW2 – Velusamy | 16.03.2021 | - |
| | | PW3- Kalamani | 16.03.2021 | - |
| | | PW4- Ganeshan | 05.11.2025 | 05.11.2025 |
| | | PW5- Suresh | 12.11.2025 | 12.11.2025 |
| | | PW6- Nagaraj | 27.01.2026 | - |
| | | PW7- Rajkumar | 17.02.2026 | 17.02.2026 |
| | | PW8- Jeyadevi | 17.02.2026 | 17.02.2026 |

| | | |
|---|---|---|
| (vii) | Date of Examination of the accused under section 313 of the Code | 23.02.2026 |
| (viii) | Details of abscond of an accused and his appearance/production, as the case may be | Nil |
| (ix) | Grant of stay by Superior Courts and the results there of | Nil |

இந்த வழக்கானது கடந்த 23.03.2026 ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது அரசுக்காக அரசுகுற்றத்துறை வழக்கறிஞர் நிலை 1 திரு.எஸ்.செந்தில்குமார், அவர்களும், 1ம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் Ms.L.நித்யபிரியா, அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.ராஜேஷ், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் மற்றும் வழக்குஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு இறுதியாக இன்று இவ்வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## <u>தீர்ப்புரை</u>

(1)கடந்த 17.09.2015ம் தேதி அதிகாலை சுமார் 3.30 மணியளவில் பல்லடம் பகுதிக்குட் பட்ட பல்லடம் KN புரம் சாமிகவுண்டம்பாளையம் குட்டைத்தோட்டத்தில் உள்ள சாட்சி ரவிக்குமார் என்பவருடைய வீட்டின் முன் வாசல் கதவின் உள்பக்க தாள்பாழை எதிரிகள் ஆதாய நோக்கத்துடன் நெம்பி உடைத்து உள்ளே நுழைந்தும், வீட்டிற்கு முன்பு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சாட்சி கணேசன் என்பவருக்கு சொந்தமான TN 39 M 1015 என்ற Suzuki Max மோட்டார் சைக்கிளை திருட முயற்சி செய்ததாக எதிரிகள் மீது இதச பிரிவுகள் 457, 380, 511 ன் கீழ் தாக்கல் செய்த குற்ற அறிக்கையை பார்வையிட்டு பரிசீலனை செய்து அவ்வாறே வழக்கு இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டது.

(2)எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானபோது அவருக்கு அரசு தரப்பில் சார்ந்து நின்ற ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச.பிரிவு 207ன் கீழ் இலவசமாக கொடுக்கப்பட்டு, மேலும் போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்டு எதிரிகள் மீது இதச பிரிவுகள் 457, 380,511ன் கீழன குற்றச்சாட்டு வனைந்து குற்றம் பற்றி விளக்கி கூறி வினவியபோதும் எதிரிகள் குற்றத்தையும், குற்றச்சாட்டுகளையும் மறுத்து கூறி வழக்கு விசாரணையை வேண்டினார்கள். எனவே அரசு தரப்பு சாட்சிகளை விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது.

(3)அரசுதரப்பில் எதிரிகள் மீதான குற்றத்தை நிரூபிக்கும் வகையில், அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. அரசுத்தரப்பு சாட்சிகள் பின்வருமாறு:

**<u>அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>**

4)இவ்வழக்கானது பல்லடம், KN புரம், சாமிகவுண்டன்பாளையம், GTN மில் எதிரில், குட்டைக்காடு என்ற முகவரியில் வசித்து வரும் ரவிக்குமார் என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் தொடரப்பட்டுள்ளது. அவர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் அ.சா.ஆ.1 புகார் குறியீடு செய்யப் பட்டுள்ளது. அ.சா.1 அவரது புகாரில் அ.சா.1 மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருவதாகவும் கடந்த 16.09.2015 ம் தேதி இரவு சுமார் 1.00 மணிக்கு அ.சா.1 அவருடைய அப்பா, அம்மா கலாமணி, அக்கா சரண்யா ஆகியோர் சாப்பிட்டுவிட்டு முன்வாசல் கதவை உள்பக்கம் தாழ்போட்டுவிட்டு படுத்து தூங்கிவிட்டதாகவும் அடுத்தநாள் அதிகாலை சுமார் 3.40 மணிக்கு வீட்டு வாசல் கதவை வெளிப்பக்கமாக யாரோ உடைத்து கொண்டு இருப்பது போல் சத்தம் கேட்டது அ.சா.1 உடனே எழுந்து பார்த்தபோது வாசல் கதவின் உள் தாழ்பாலானது நெம்பி உடைக்கப்பட்டு கதவு லேசாக திறந்த நிலையில் இருந்தது வீட்டுக்கு வெளியே யாரோ ஆட்கள் நடமாடும் சத்தம் கேட்டதால் அ.சா.1 சத்தம் போட்டபோது அங்கே அவருடைய பக்கத்து வீட்டுக்காரரான அ.சா.1 க்கு சித்தப்பா முறையான கணேசன் அங்கே ஓடி வந்தார் இருவரும் சென்று வெளியே தேடிபார்த்தபோது அங்கு வீட்டுக்கு முன்னால் நிறுத்தியிருந்த அவருடைய TN 39 M 1015 என்ற Suzuki Max R100 மோட்டார் சைக்கிள் காணவில்லை சிறிது தூரம் சென்று தேடிபார்த்தபோது அவர்களது வீட்டுக்கு சிறிது தொலைவில் தோட்டத்தில் கிடந்தது இரவு நேரம் என்பதால் உடனடியாக போலீஸ் ஸ்டேசனுக்கு வந்து புகார் கொடுக்க முடியவில்லை யாரோ திருடர்கள் தங்கள் வீட்டின் வாசல் கதவை உடைத்து மோட்டார் சைக்கிளை திருட முயற்சி செய்திருப்பது தெரியவருகிறது. எனவே, மேற்படி திருடர்களை கண்டுபிடித்து மேல் நடவடிக்கை எடுக்குமாறு கூறப்பட்டுள்ளது.

5)இவ்வழக்கு சம்பவம் பற்றி கேள்விப்பட்ட சாட்சியாக அ.சா.2 வேலுச்சாமி மற்றும் அ.சா.3 கலாமணி என்பவரும் எதிரிகளை தேடி சென்றபோது திருட முயற்சி

செய்யப் பட்ட மோட்டார் சைக்கிளை தோட்டத்தில் பார்த்தது குறித்து அ.சா.4 கணேசன் என்பவரும் பார்வை மகசர் சாட்சியாக அ.சா.5 சுரேஷ் என்பவரும் எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தபோது உடனிருந்த சாட்சியாக அ.சா.6 நாகராஜ் என்பவரும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

6)இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா.7 ராஜ்குமார், சிறப்பு உதவி ஆய்வாளர் அவரது சாட்சியத்தில் கடந்த 17.09.2015ம் தேதி காலை 8.00 மணியளவில் பல்லடம் காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது ரவிக்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று பல்லடம் காவல் நிலைய குற்ற எண்.1111/2015 பிரிவுகள் 457,380,511 இதசவின் கீழ் அ.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும் அசல் முதல் தகவல் அறிக்கையுடன் வாதியின் புகாரினை இணைத்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும் வழக்கு கோப்பை புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் சுப்பிரமணியம் பார்வைக்கு வைத்ததாக கூறியுள்ளார்.

7)இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.8 ஜெயதேவி, காவல் ஆய்வாளர் அவரது சாட்சியத்தில் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் திரு.சுப்பிரமணியன் இறந்து விட்டதால் அவரது கையெழுத்தும் கையொப்பமும் தனக்கு நன்கு பரிட்சயம் வழக்கு கோப்பு ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளிப்பதாகவும் கடந்த 17.09.2015 ஆம் தேதி பல்லடம் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் ராஜ்குமார் அவர்களால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணைக்காக அவரது பார்வைக்கு வைத்த வழக்கு கோப்பினை அவர் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 17.09.2015 ஆம் தேதி சம்பவ இடத்தை அடையாளம் காட்ட சாட்சிகள் சுரேஷ் மற்றும் காளிஸ்வரன் ஆகியோர்கள் முன்பு பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ.6 மாதிரி வரைப்படம் தயார் செய்ததாகவும் சாட்சிகள் ரவிக்குமார், வேலுச்சாமி, கலாமணி, சரண்யா, சுரேஷ், காளிஸ்வரன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் பின்னர் 21.11.2015 ஆம் தேதி காலை 6.00 மணிக்கு ஆறுமத்தாம்பாளையம் பிரிவு ரோடு அருகே காவல் ஆய்வாளர் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் ராஜ்குமார் மற்றம், காவலர் சகிதம் புலன்

விசாரணைக்காக கண்காணித்துக்கொண்டிருந்தபோது பின்னர் பெயர் விலாசம் தெரிந்துகொண்டு கார்த்திக் த/பெ,மருதையன் பர்மா காலனி திருவெறும்பூர் திருச்சி தற்போது விநாயகர் கோவில் வீத அறிவொளி நகர் பல்லடம் மற்றொருவர் நாகேந்திரன் த/பெ. மோகன்குமார் ஈஸ்வரன் கோவில் வீத அருகே பின்புறம் போலீசை கண்டவுடன் ஓட எத்தனித்தவர்களை பிடித்து விசாரிக்க பல்லடம் காவல் நிலைய சரகத்தை சேர்ந்த குற்றவாளிகள் என்று தெரிந்து K.N.புரம் லட்சுமி மில்ஸ் சாமிகவுண்டம்பாளையம், பெரும்பாளி ராயர்பாளையம் ஆகிய இடங்களில் நடைப்பெற்ற வழிப்பறி கொள்ளை , திருட்டு, திருட முயற்சி ஆகிய வழக்குகளில் சம்மந்தப்பட்ட எதிரிகள் என தெரியவந்து காலை 6.30 மணிக்கு எதிரிகள் கார்த்திக் மற்றும் நாகேந்திரன் ஆகிய இருவரையும் பல்லடம் காவல் நிலைய குற்ற எண் 1109/2015 சட்டப்பிரிவு 392 இதச குற்ற எண் 1110/2015 சட்டப்பிரிவு 457,380 இதச, குற்ற எண் 1111/2015 சட்டப்பிரிவு 457,380,511 இதச மற்றும் குற்ற எண் 1120/2015 சட்டப்பிரிவு 394,உ/இ 397 இதச குற்ற எண் 1151/2015 சட்டப்பிரிவு 457,380,511 இதச வழக்குகளில் கைதிற்கான காரணம் கூறி கைது செய்து சாட்சிகள் நாகராஜ், சரவணன் ஆகியோர் முன்னிலையில் எதிரி கார்த்திக் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து அந்த ஒப்புதல் வாக்கு மூலத்தில் எதிரிகள் தன்னை கூட்டிச் சென்றால் இருவரும் சேர்ந்து திருட முயற்சி செய்த இடங்களை கே.என் புரம் லட்சுமி மில் வழிப்பறி கொள்ளையில் தங்க செயினை விற்ற நகை கடையையும் சாமி கவுண்டம்பாளையத்தில் ஒரு வீட்டில் திருடி வீட்டில் இருந்த சாம்சங் செல்போனை எடுத்து அடையாளம் காட்டி ஆஜர் படுத்தியதாகவும் அதை காவல் ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியதாகவும் எதிரி கார்த்திக் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி ஆ.த.சா.அ.7 என்றும் எதிரி நாகேந்திரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப் பட்ட பகுதி ஆ.த.சா.அ.8 என்றும் எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும் சாட்சிகள் கார்த்திக் சரவணனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் இத்துடன் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது 25.11.2015 ஆம் தேதி சட்டப்பிரிவுகள் 457,380,511 இதசவின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ததாக கூறப்பட்டுள்ளது.

<u>கு.வி.மு.சபிரிவு 313(i)(b)ன் கீழ் எதிரிகளிடம் வினவப்பட்ட வினாவிற்கான பதில் :</u>

8)அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமான அம்சங்கள் குறித்து எதிரிகளிடம் கு.வி.மு.ச.313(i)(b) பிரிவின் கீழ் வினவிய போது எதிரிகள் சாட்சிகள் அனைத்தையும் பொய் சாட்சிகள் என்றும், பொய் வழக்கு என்று தெரிவித்தும், மேலும் தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று தெரிவித்ததால் எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லை என்று முடிக்கப்பட்டு இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது.

<u>9)அரசு தரப்பு வாதம்:</u>

அ.சா.1 முதல் அ.சா.6 ன் சாட்சியங்கள் மூலம் எதிரிகள் மீதான குற்றம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா.7 மற்றும் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.8 சாட்சியத்தின் மூலம் அரசுதரப்பு வழக்கு மற்றும் அரசுதரப்பு சான்றாவணங்கள் உறுதிப் படுத்தப் பட்டுள்ளது என்றும், எனவே அரசு தரப்பில் எதிரிகள் மீது பிரிவுகள் 457,380 உ/இ 511 இதசவின் கீழான குற்றம் நிரூபணம் செய்யப் பட்டு விட்டதாகவும், எனவே, எதிரிகள் மீது பிரிவுகள் 457,380 உ/இ 511 இதசவின் கீழான குற்றத்திற்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

<u>எதிரிகள் தரப்பு வாதம் :</u>

10)இவ்வழக்கில் குற்றயிறுதியறிக்கை மற்றும் அதனுடன் தாக்கல் செய்யப் பட்ட ஆவணங்களின் வாயிலாக எதிரிகள் மீது சுமத்தப்பட்டு இருக்கும் குற்றச் சாட்டுகள் குறித்து எதிரிகளிடம் கு.வி.மு.ச.பிரிவு 240ன் கீழ் வினவிய போது, இவ்வழக்கு பொய்வழக்கு என்று கூறி, அரசுதரப்பு வழக்கை மறுத்துள்ளார்கள். எதிரிகளுக்கு பாதகமாக உள்ள அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச. 313(i)(b)பிரிவின் கீழ் எதிரிகளிடம் வினவிய போது, சாட்சிகள் அனைத்தும் பொய் சாட்சிகள் என்றும், இவ்வழக்கு சொத்துக்கள் எதிரிகளிடமிருந்து தான் கைப்பற்றப்பட்டது என்பதும், எதிரிகள் தான் வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்பதும் அரசு தரப்பில் தகுநிலை ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்றும், அதனால் எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்று தெரிவித்தார்.

**<u>தீர்மானிக்கப்பட வேண்டிய பொருண்மை:</u>**

**11)**இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசுத்தரப்பில் நிரூபிக்கப் பட்டுள்ளதா? என்று பார்க்கும்போது, அ.சா.1 ரவிக்குமார் அவரது சாட்சியத்தில் கடந்த 16.09.2015 ம் தேதியன்று இரவு 10 மணியளவில் வீட்டின் உள்தாழ்பாழிட்டு அ.சா.1 அவரது அப்பா வேலுச்சாமி, அம்மா கலாமணி ஆகியோருடன் வீட்டிற்குள் தூங்கிக் கொண்டிருந்தபோது 17.09.2015 ம் தேதியன்று அதிகாலை சுமார் 3.40 மணியளவில் கதவை யாரோ நெம்பி உடைப்பதுபோல் சத்தம் கேட்டு அ.சா.1 அவரது அப்பாவையும், அம்மாவையும் எழுப்பி சத்தம் வருவதாகவும் யாரோ உடைப்பதாக சொல்லி லைட் போட்டு பார்த்தபோது கதவின் உள் தாழ்பாள் உடைக்கப்பட்டு கதவு பாதி திறந்த நிலையில் இருந்தது சத்தம் போட்டதை கேட்டு அருகிலிருக்கும் அவரது சித்தப்பா கணேசன் அவர்கள் குடோனில் வேலை செய்யும் நபர்கள் எல்லாம் வந்து பார்த்தபோது யாரும் இல்லை அந்த சமயத்தில் சித்தப்பா வீட்டில் நிறுத்தியிருந்த இருசக்கர வாகனம் TN 39 N 1015 என்ற இருசக்கர வாகனத்தை காணவில்லை உடனே பக்கத்து தோட்டத்தில் இருசக்கர வாகனத்தையும் திருடிய நபரையும் தேடிபார்த்தும் அந்த நபர் கிடைக்கவில்லை என்றும் ஆனால் வண்டி மட்டும் பூட்டு உடைந்த நிலையில் தோட்டத்தில் கிடந்தது உடனே வண்டியை வீட்டிற்கு எடுத்து கொண்டு வந்ததாகவும் ஆதலால் யாரோ ஒரு நபர் வண்டியை திருடுவதற்காகவும் வீட்டில் இருந்த பொருட்களை திருட முயற்சி செய்தது தெரியவந்தது அன்று அதிகாலை என்பதால் உடனே சென்று காவல்நிலையத்தில் புகார் கொடுக்க இயலவில்லை காலை 8 மணிக்கு காவல்நிலையம் சென்று அ.சா.ஆ.1 புகார் கொடுத்ததாக கூறியுள்ளார்.

12)இவ்வழக்கு சம்பவம் பற்றி கேள்விப்பட்ட சாட்சியான அ.சா.2 வேலுச்சாமி அவரது சாட்சியத்தில் கடந்த 16.09.2015 ம் தேதியன்று இரவு 10.00 மணியளவில் வீட்டின் உள்தாழ்பாழிட்டு அ.சா.2 ம் அவரது மகன் மனைவி கலாமணி ஆகியோர் வீட்டிற்குள் தூங்கிக்கொண்டிருந்தபோது 17.09.2015 ம் தேதியன்று அதிகாலை சுமார் 3.40 மணியளவில் கதவை யாரோ நெம்பி உடைப்பதுபோல் அவரது மகனுக்குசத்தம் கேட்டது என்றும் அ.சா.2 ஐயும் அவரது மனைவியையும் எழுப்பினார் உடனே அவர்கள் போன் செய்து அ.சா.2 ன் வீட்டருகில் குடியிருக்கும் சித்தப்பா மகன் கணேசனுக்கு

தகவல் சொன்னதாகவும் அவர்கள் உடனே அவர்கள் வீட்டிற்கு வந்து கணேசன் வீட்டில் நிறுத்தியிருந்த இருசக்கர வாகனம் TN 39 N 1015 என்ற இருசக்கர வாகனத்தை காணவில்லை என்று கணேசன் கூறினார் நாங்கள் அக்கம் பக்கத்தில் வண்டியையும், அந்த நபரையும் தேடியும், கிடைக்கவில்லை ஒரு அரைகிலோ மீட்டர் தள்ளி இருசக்கர வாகனம் ஒயர் கனெக்சன் எல்லாம் கழற்றிய நிலையில் ஸ்டார்ட் செய்வதற்கு முயற்சி செய்த நிலையில் இருந்தது அன்று அதிகாலை என்பதால் உடனே காவல் நிலையத்தில் புகார் கொடுக்க இயலவில்லை காலை 8 மணிக்கு காவல் நிலையம் சென்று அ.சா.2 ன் மகன் ரவிக்குமார் புகார் கொடுத்ததாகவும் யாரோ ஒரு நபர் தங்கள் வீட்டில் உள்ள பொருட்களை திருட முயற்சி செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

13)அ.சா.3 கலாமணி அவரது சாட்சியத்தில் கடந்த 16.09.2015 ம் தேதியன்று இரவு 10 மணியளவில் வீட்டின் உள்தாழ்பாளிட்டு அவரது மகன் கணவர் ஆகியோர் வீட்டிற்குள் தூங்கிக்கொண்டிருந்ததாகவும் விடிந்ததும் அதிகாலை சுமார் 3.40 மணியளவில் கதவை யாரோ நெம்பி உடைப்பதுபோல் மகன் சொல்ல அவர்கள் எழுந்து லைட் போட்டு பார்த்தபோது கதவின் தாழ்பாள் உடைந்திருந்தது உடனே எங்கள் வீட்டிற்கு வந்து கணேசன் தான் வீட்டில் நிறுத்தியிருந்த சுசுகி இருசக்கர வாகனத்தை காணவில்லை என்று கூறினார் நாங்கள் அக்கம் பக்கத்தில் வண்டியையும் அந்த நபரையும் தேடினோம் ஆனால் அந்த நபர் கிடைக்கவில்லை தங்கள் வீட்டருகே உள்ள தோட்டத்தில் வண்டி மட்டும் இருந்தது அங்கு யாரும் இல்லை அதிகாலை என்பதால் உடனே காவல்நிலையத்தில் புகார் கொடுக்க இயலவில்லை. அதனால் காலை 8 மணிக்கு காவல்நிலையம் சென்று அ.சா.3 ன் மகன் ரவிக்குமார் புகார் கொடுத்தார் யாரோ ஒரு நபர் தங்கள் வீட்டில் உள்ள பொருட்களை திருட முயற்சி செய்ததாக தெரியவந்தது போலீசார் தன்னை விசாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

14)இவ்வழக்கின் எதிரிகளை தேடி சென்றபோது திருட முயற்சி செய்யப் பட்ட மோட்டார் சைக்கிளை தோட்டத்தில் பார்த்தது குறித்து அ.சா.4 கணேசன் அவரது சாட்சியத்தில் கடந்த 16.09.2015 ம் தேதி இரவு 9.00 மணியளவில் அ.சா.4 அவரது சொந்த வேலையாக வெளியில் சென்றுவிட்டு அதிகாலை 3.30 மணியளவில் அவரது வீட்டுக்கு திரும்ப வந்தபோது அவரது பெரியப்பா மகன் வேலுச்சாமி அவர் வீட்டுக்கு

முன்பாக நின்று கொண்டிருந்தபோது சத்தம் போட்டுக்கொண்டிருந்தார் அ.சா.4 என்னவென்று விசாரித்தபோது அவரது வீட்டின் முன்பக்க கதவை இரண்டு நபர்கள் வந்து உடைத்து விட்டதாக சொன்னார் அக்கம் பக்கத்தில் பார்த்தபோது யாரும் இல்லை வீட்டிற்கு வந்தபோது அவரது அண்ணன் மனைவி கலாமணி அவருடைய மகன் சரண்யா மற்றும் ரவிக்குமார் வீட்டிற்கு வெளியே வந்தார்கள் அவர்களிடம் விசாரித்த போது அவர்களின் வீட்டின் கதவை உடைக்கப்பட்டதாக சொன்னார்கள் அவர்கள் வீட்டில் நிறுத்தியிருந்த அ.சா.4 ன் உடைய TVS Suzuki max 100 TN 39 M 1015 என்ற இருசக்கர வாகனம் காணவில்லை சுத்தி பார்த்தபோது குடோன் பின்புறம் உள்ள காட்டு பகுதியில் அவரது இருசக்கர வாகனம் பூட்டிய நிலையில் கிடந்தது என்றும் வண்டி பூட்டி இருந்ததால் தூக்க முடியவில்லை மறுநாள் ரவிக்குமார் போலீசில் புகார் கொடுத்ததாகவும் பகல் 1.00 மணியளவில் போலீசார் வந்து விசாரித்ததாகவும் அவரது வண்டியை அடையாளம் காண்பித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

15)மேலும் அவரது குறுக்கு விசாரணையில் ரவிக்குமார் தனக்கு பெரியப்பாவின் மகன் என்றும் ரவிக்குமார் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தபோது அ.சா.4 உடன் செல்லவில்லை என்பதாகவும் கூறியுள்ளார். அ.சா.4 வாகனத்தை இரவு 9 மணிக்கு நிறுத்திவிட்டு அதிகாலை 3.30 மணிக்கு நிறுத்திவிட்டேன் என்று சொல்வது தவறு என்று ஒப்புக்கொண்டுள்ளார்.

16)அ.சா.5 சுரேஷ் அவரது சாட்சியத்தில் கடந்த 17.09.2015 ம் தேதி அதிகாலை குட்டை காடு தோட்டம் அருகில் 3 முதல் 4 மணிக்கு திருட்டு நடந்திருப்பதாக கேள்விப் பட்டு அன்றே காலை 7 மணியளவில் சென்று பார்த்ததாகவும் அன்று மதியம் 1 மணியளவில் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து பார்வையிட்டு அ.சா.ஆ.2 பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும் அதற்கு சாட்சியாக அ.சா.5 ம் காளீஸ்வரன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்ததாக கூறியுள்ளார். மேலும் அவரது குறுக்கு விசாரணையில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ 20 வருடங்களாக தெரியும் என்பதாக கூறியுள்ளார்.

17)இவ்வழக்கின் எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தபோது உடனிருந்த சாட்சியாக அ.சா.6 நாகராஜ் அவரது சாட்சியத்தில் கடந்த 2015 ம் வருடம் ஒரு நாள்

காலை 11.00 மணியளவில் அ.சா.5 ம் அவரது நண்பர் சரவணனும் ஆறுமுத்தாம் பாளையம் பிரிவு ரோடு அருகில் கூட்டமாக போலீசார் நின்று கொண்டிருந்தபோது ஆஜர் இரண்டு நபர்கள் இருந்தார்கள் அவர்கள் பெயர் கார்த்திக் மற்றும் நாகேந்திரன் என்று சொன்னார்கள் திருட்டு வழக்கு சம்மந்தமாக இரண்டு மூன்று இடங்களில் திருடியதாக சொன்னார்கள் அங்கிருந்த நபர்களிடம் கையொப்பம் கேட்டார்கள் கையொப்பம் செய்ததாகவும் எதிரி கார்த்திக் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது சாட்சி கையொப்பம் தன்னுடையதுதான் என்றும் அந்த கையொப்பம் அ.சா.ஆ.3 என்றும் எதிரி நாகேந்திரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது சாட்சி கையொப்பம் தன்னுடையதுதான் என்றும் அந்த கையொப்பம் அ.சா.ஆ.4 என்றும் போலீசார் தன்னை விசாரித்ததாக கூறி அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

18)இவ்வழக்கில் அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் வழக்கிற்கு ஆர்வமுள்ள சாட்சிகளாக உள்ள நிலையில் தனிபட்ட நபர்களை இவ்வழக்கில் சாட்சியாக விசாரித்து நிரூபிக்க அரசுதரப்பில் எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை. மேலும், இவ்வழக்கின் எதிரிகளை தேடி சென்றபோது திருட முயற்சி செய்யப்பட்ட மோட்டார் சைக்கிளை தோட்டத்தில் பார்த்தது குறித்து சாட்சியம் அளிக்கும் அ.சா.4 கணேசன் இவ்வழக்கின் புகார்தாரரான ரவிக் குமார் தனக்கு பெரியப்பாவின் மகன் என்றும் கூறியுள்ளார். அ.சா.1 அவரது சாட்சியத்தில் வண்டி மட்டும் பூட்டு உடைந்த நிலையில் தோட்டத்தில் கிடந்தது உடனே வண்டியை வீட்டிற்கு எடுத்துக்கொண்டு வந்ததாகவும் கூறியுள்ளார். சம்பவம் கேள்விப் பட்ட சாட்சியாக அ.சா.2 இருசக்கர வாகனம் ஒயர் கனெக்சன் எல்லாம் கழற்றிய நிலையில் ஸ்டார்ட் செய்வதற்கு முயற்சி செய்த நிலையில் இருந்ததாக கூறியுள்ளார். அ.சா.3 தங்கள் வீட்டருகே உள்ள தோட்டத்தில் வண்டி மட்டும் இருந்ததாக கூறப்பட்டுள்ளது. ஆனால் அ.சா.4 அவரது சாட்சியத்தில் TVS Suzuki max 100 TN 39 M 1015 என்ற இருசக்கர வாகனம் காணவில்லை சுத்தி பார்த்தபோது குடோன் பின்புறம் உள்ள காட்டுபகுதியில் அவரது இருசக்கர வாகனம் பூட்டிய நிலையில் கிடந்தது என்றும் வண்டி பூட்டி இருந்ததால் தூக்க முடியவில்லை என்பதாக கூறப்பட்டுள்ளது. அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் ஒன்றுக்கு

ஒன்று முரணாக அமைந்துள்ளது. இவ்வழக்கின் பார்வை மகசர் சாட்சியான அ.சா.5 அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ 20 வருடங்களாக தெரியும் என்பதாக கூறியுள்ளார். இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான அ.சா.8 அவரது சாட்சியத்தில் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றுதல்மகசர் கைப்பற்றப்பட்டதாக சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கின் எதிரிகள் தொடர்புடைய மற்ற வழக்குகளின் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் எந்த வழக்கிற்கான சொத்துக்கள் கைப்பற்றுதல்மகசரில் கைப்பற்றப்பட்டது என்பது குறித்து தெளிவுப்படுத்தி சாட்சியம் அளிக்கவில்லை என்பது ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது அறியமுடிகிறது. மேலும், இவ்வழக்கின் எதிரிகளிடமிருந்து ஒப்புதல்வாக்குமூலம் பெறும்போது உடனிருந்த சாட்சியான அ.சா.6 அரசுதரப்பு வழக்கிற்கு விரோதமாக பிறழ் சாட்சியம் அளித்துள்ள நிலையில் அவர்களது சாட்சியங்கள் மூலம் வழக்கு சம்பவம் குறித்தோ எதிரிகளை அடையாளப் படுத்தியோ தெளிவுப்படுத்தியோ அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள் சாட்சியம் அளிக்காத நிலையில் எதிரிகள் தான் வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்பதும் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, எதிரிகள் மீதான குற்றச்சாட்டிலிருந்து எதிரிகளை விடுதலை செய்யலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

19)முடிவில், எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 457, 380 r/w 511 ன் கீழான குற்றங் களிலிருந்து குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து குவிமுச 248(1) பிரிவின் கீழ் இந்நீதிமன்றம் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

20)இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்பட்டு ஆஜர்படுத்தப் படவில்லை.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026–ம் வருடம் மார்ச் திங்கள் 26 ம் நாள் வியாழக் கிழமை அன்று அவையறிய திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

S SAPNA

Digitally signed by S SAPNA
Date: 2026.03.26 11:56:18 +0530

நீதித்துறைநடுவர்,
பல்லடம்.

**<u>அரசுத் தரப்பு சாட்சியங்கள்</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | 16.03.2021 | திரு.ரவிக்குமார் த/பெ. வேலுச்சாமி – புகார்தாரர் |
| அ.சா.2 | 16.03.2021 | திரு.வேலுச்சாமி த/பெ. முருகசாமி |
| அ.சா.3 | 16.03.2021 | திருமதி.கலாமணி க/பெ. வேலுச்சாமி |
| அ.சா.4 | 05.11.2025 | திரு.கணேசன் த/பெ. சின்னப்பன் |
| அ.சா.5 | 12.11.2025 | திரு.சுரேஷ் த/பெ.கந்தசாமி – பார்வை மகசர் சாட்சி |
| அ.சா.6 | 27.01.2026 | திரு.நாகராஜ் த/பெ. சுப்பிரமணி – எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்தின்போது உடனிருந்த சாட்சி |
| அ.சா.7 | 17.02.2026 | திரு.ராஜ்குமார், சிறப்பு உதவி ஆய்வாளர்– முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அதிகாரி |
| அ.சா.8 | 17.02.2026 | திருமதி.ஜெயதேவி, காவல்ஆய்வாளர் – புலன் விசாரணை அதிகாரி |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 /அ.சா.1 | 17.09.2015 | புகார் |
| அ.சா.ஆ.2/அ.சா.5 | 17.09.2015 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.3/அ.சா.6 | 21.11.2015 | 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது சாட்சி கையொப்பம் |
| அ.சா.ஆ.4/அ.சா.6 | 21.11.2015 | 2ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது சாட்சி கையொப்பம் |
| அ.சா.ஆ.5/அ.சா.7 | 17.09.2015 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.6/அ.சா.8 | 17.09.2015 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.7/அ.சா.8 | 17.09.2015 | எதிரி கார்த்திக் கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்தின் அனுமதிக்கப் பட்ட பகுதி |
| அ.சா.ஆ.8/அ.சா.8 | 21.11.2015 | எதிரி நாகேந்திரன் கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்தின் அனுமதிக்கப் பட்ட பகுதி |

**அரசு தரப்பு சான்று பொருட்கள்** – இல்லை

**எதிரிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை**

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2026.03.26 11:56:26 +0530

நீதித்துறைநடுவர்,
பல்லடம்.

**குறிப்பு:**

1) எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என தீர்மானிக்கப்பட்டது.

2) வழக்கு விசாரணை காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்து வந்தார்கள்.

3) வழக்கு முடிவின் விவரம் தக்க காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டது.

4) வழக்கின் விசாரணை காலத்தில் சாட்சிகள் யாரும் 3 முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

7) தீர்ப்பின் நகல் மேன்மைமிகு திருப்பூர், தலைமை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.